Deposition of Witness

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE ATHOOR

**S.T.C.No.356/2022**

**Deposition of PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராமு | ஜாதி | : |
| த/பெ | : பழனிக்கவுணட்ர் | தொழில் | : விவசாயம் |
| கிராமம் | : குரும்பப்பட்டி | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : 65/2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.03.2023.

(Accused Present)

முதல் விசாரணை

நான் குரும்பப்பட்டியில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 10.04.2021 அன்று காலை 09.00 மணியளவில் டிராக்டிரில் நானும், சிவமுருகன், நாகராஜ் ஆகியோர் போர் தோண்டுவதற்காக ஆதிலட்சுமியுரத்திற்கு சென்றபோது டிராக்டரை சிவமுருகன் என்பவர் ஓட்டிவந்தார். கோடாங்கிபட்டி பிரிவு அருகே சென்றபோது எதிரே வந்த அரசு பேருந்து டிராக்டர் மீது மோதியது. அதில் எனக்கு தலை, 2 தோள்பட்டையிலும், வலது விலாவில் காயம் ஏற்பட்டு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. மேற்கண்ட விபத்தில் நாகராஜ்க்கு தலை, இடுப்பு, முதுகு ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. சிவமுருகனுக்கு தலை, இடுப்பு, கால்முட்டியில் காயம் ஏற்பட்டது. அந்த அரசு பேருந்தை ஓட்டிவந்த டிரைவர் நீதிமன்றத்தில் ஆஜர் ஆகியிருக்கும் ஓட்டுநர் தான். பின்பு ஆம்புலன்ஸ் மூலம் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு சிசிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கு போலீசார் வந்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். நான் 10 நாட்களாக மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த விபத்து நடைபெற்ற இடம் நேரான ரோடு என்றால் சரிதான். கோடாங்கிபட்டி பிரிவில் இடது பக்கம் பஸ் நிறுத்தம் மற்றும் நிழற்குடை உள்ளது என்றால் சரிதான். அந்த பிரிவில் கட்சி கொடி மற்றும் கட்சி கம்பங்கள் நடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரோட்டின் வலது புறத்தில் தண்ணீர் டேங்க், வேப்பமரம் உள்ளதா என்றால் கொஞ்ச தூரம் தள்ளி உள்ளது. புதுகோடாங்கிபட்டி பிரிவில் இருந்து நாங்கள் வாகனத்தை திருப்பி தூரம் 20 அடி தள்ளி

இருக்கும் என்றால் சரிதான். பஸ் ஸ்டாபில் இருக்கும் நழிற்குடை மற்றும் கொடி கம்பங்கள் மேற்கண்ட ரோட்டை மறைத்து கொண்டதால் ரோட்டில் பேருந்து வருவதை கவனிக்காமல் சிவமுருகன் என்பவர் கவனக்குறைவாக டிராக்டரை இயக்கி விபத்து ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை அப்போதே சம்பவ இடத்தில் பார்த்தேன். எதிரி ஓட்டி வந்த பேருந்து இடது புறமாகத்தான் வந்தது என்றால் இல்லை வலது புறமாக வந்தது.

P JAISANKAR

Digitally signed by P JAISANKAR

District Munsif Cum Judicial Magistrate,
Athoor